Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 3, Issue 2, November 2023 E-ISSN – 2583-715X



# A Psychological Perspective of Agam Realities of the Women in *Kaliththogai*

**V. Rathna,** Research Scholar of Tamil, Reg. No.: 20PHDMF003, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-6505-5959**
**Dr. M. Kavitha,** Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0484-9311**
**DOI: 10.5281/zenodo.10511750**

## Abstract

*Psychology is a scientific study that studies human behaviour. The environment in which one lives is a major factor in one's behaviour. The social environment determines one's behaviour and personality. Literature is created with the nature of the human mind. The Literature that portrays real-life following the reals of human nature will be praised as the best literature. It is meritorious to consider such literature with psychological knowledge as a treasure of any literature. The word 'psychology' is new to modern Tamil society but the thoughts of the romantic feelings of the Thalaivan (leader) and the wife (Thalaivi) and the morality of the woman, from the life of hidden love (Kalavu Kadhal) to the life of married life (Karpu Kathal) is always a good example of the psychological study of the Tamils. The cognitive approach to psychology is another important school of thought that emphasizes mental capacities such as thoughts and memories of a language. Many Agam (Internal) truths are found throughout literature. In Tamil, Kaliththogai has lots of glimpses of Agam (Internal) truths. Anyone can learn these principles through their imagination, insight and understanding. This study records ideas that connect intuitions with facts. In Kaliththogai, the Thalaivi, Thozhi, Sevili, Parathai and Kathal Parathai can be understood through their discourses. Hence, the purpose of this article is to explore the psychological aspects of women's minds found in Kaliththogai.*

**Keywords:** Psychology, Perspective, Agam, Reality, Women, *Kaliththogai*.

## References

[1] Ilampuranar. *Tolkappiyam Mahadathikaram*. Tirunelveli South Indian Saiva Siddhantha Literature Society, Chennai- 600 108.
[2] Balasubramanian. K. V. *Kalithogai Mulamum Uraium*. New Century Book House Pvt.Ltd, Chennai-600098, First Edition - 2007.
[3] Tirukurukai Perumal Kavirayar. *Maranalankaram*. Senthamil Prasuram, Madurai, Second Edition – 1929.
[4] Viramamunivar. *Aintilakana Thonnul Vilakkam*. Susaiyappa Achigudam, Chennai, First Edition – 1891.
[5] Vellaivaranan. K. *Tholkappiya Sithanaigal*. India Panpattu Aaivu Maiyam, Chennai, First Edition – 2013.
[6] Vaidyanatha Desikar. *Ilakkana Vilakkam*. Saraswati Mahal Nool Nilayam, Thanjavur, First Edition – 1974.
[7] Tilagavathi, K. *Sanga Kala Magalir Valviyal*. Iraiyarul Pathipagam, Trichy, First Edition – 2004.

**Volume 3, Issue 2, November 2023** **E-ISSN – 2583-715X**

[8] Bhavathi, K. *Thiranaivu Anugumuraigal*. World Tamil Research Institute, Chennai, First Edition -1989.
[9] Balachandran, S. *Ilakkia Thiranaivu*. New Century Book House Pvt.Ltd, Chennai, First Edition -1976.
[10] Vanitha, J. "Sanga Kalathil Magalir" *Semmozhi Tamil Special Issue*, November 2019. ISSN: 2321-0737.
[11] Kanagasundri. P. "Sanga Ilakkiyankalil Thalavi." *Modern Tamil Research Journal*, October 2021, ISSN: 2321 – 984X.
[12] Manickam. G. *Tholkappiyam.* Uma Pathipagam, Chennai, First Edition - 2006.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 3, Issue 2, November 2023** **E-ISSN – 2583-715X**

# உளவியல் நோக்கில் இலக்கண மெய்ப்பாடுகளில் கலித்தொகையில் மகளிர்

**வே. ரத்னா**, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 20PHDMF003, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-6505-5959**
**முனைவர் மு. கவிதா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-0484-9311**
**DOI: 10.5281/zenodo.10511750**

**ஆய்வுச்சுருக்கம்**

*உளவியல் மனிதனின் நடத்தையை அறியும் ஒரு விஞ்ஞான கருவியாகும். ஒருவரின் நடத்தைக்கு அவன் வாழும் சூழ்நிலை முக்கியக் காரணியாக அமைகிறது. சூழல் என்பது ஒருவரின் நடத்தை மற்றும் அவர்களின் ஆளுமையை நிர்ணயிக்கிறது. மனித மனத்தின் இயல்புகளைக் கொண்டே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. உண்மையான வாழ்வை உலக இயல்புக்கு ஏற்ப உருவாக்கிக் காட்டும் இலக்கியமே சிறந்த இலக்கியமாகப் போற்றப்படும். இத்தகைய இலக்கியங்களை உளவியல் அறிவுடன் சிந்திப்பது பயனுடையதாகும். உளவியல் என்ற சொல்தான் நமக்குப் புதிதே தவிர களவு வாழ்க்கைத் தொடங்கி கற்பு வாழ்க்கை வரையிலான தலைவன் தலைவியின் காதல் உணர்வுகளையும், மகளிரின் ஒழுக்கத்தையும் பற்றிய சிந்தனை தமிழரிடம் தொன்றுதொட்டே அமைகிறது. உளவியலுக்கான அறிவாற்றல் அணுகுமுறை என்பது எண்ணங்கள் மற்றும் நினைவுகள் போன்ற மனதிறன்களை வலியுறுத்தும் மற்றொரு முக்கியமான சிந்தனைப் பள்ளியாகும். இலக்கணங்களில் காணப்படும் மெய்ப்பாடுகள் இலக்கியங்களில் விரவிக்கிடக்கின்றன. படிப்போரின் கற்பனை, உய்த்துணரும் அறிவு, பொருளறியும் திறன் இவற்றினால் இந்த நயங்களை அறிந்துகொள்ள முடியும். கலித்தொகையில் அகவுணர்வுகளை மெய்ப்பாடுகளோடு இணைத்துப் பார்க்கும்படியான கருத்துக்களையும் பதிவுசெய்கிறது. தலைவி, தோழி, செவிலி, பரத்தை, காதற்பரத்தை இவர்களின் கூற்றுகளின் வாயிலாக அறியமுடிகிறது. மனித மனத்தின் உளவியல் கூறுகளை உள்ளடக்கியதாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** உளவியல், இலக்கண மெய்ப்பாடு, மகளிர், *கலித்தொகை.*

**முன்னுரை**

மனிதனின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் பதிவேடாக அமைவது இலக்கியமாகும். இலக்கியத்தின் உயிரோட்டமாக உள்ளத்துள் முகிழ்த்து எழும் உளவியல் எண்ணங்களை அமைகின்கின்றன. எண்ணத்தின் பிறப்பிடம் மனம் ஆகும். மனதில் தோன்றும் எண்ண அலைகள் பல்வேறு கோணங்களில் கலித்தொகையில் பதிவாகியிருக்கின்றன என்ற

கருதுகோளை முன்வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன. தலைவன் தலைவியின் காதல் உணர்வு, தலைவியின் உள்ள உறுதி, தலைவியின் சிந்தனைகள் மற்றும் மனநிலை, தலைவியின் ஊடல் நிலை ஆகியவை உலக இயல்புக்கு ஏற்றார் போல் உருவாக்கிக் காட்டும் இலக்கியமே சிறந்ததாக மதிக்கப்படும் உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தும் இலக்கியங்கள் உளவியலுடன் தொடர்புபடுத்தி விரிவாக இவ்வாய்வின்கண் விளக்கப்பட்டுள்ளன. கருத்துப் பரிமாற்றச் சூழலில் ஒருவருடைய உணர்ச்சிகளின் அடிப்படையில் வெளிப்படுத்தக் கூடிய புலப்பாடுகளே மெய்ப்பாடு ஆகும். உளவியல் மனித உணர்வுகளுடன் தொடர்புடையதால் இதனை உணர்வுநிலை பற்றிய அறிவியல் என்றும் கூறுவர். உலகைப் புதியக் கோணத்தில் மாற்ற முயலும் உளவியலானது இலக்கியத்தில் பெருமளவு காணப்படுகின்றது. மனிதனின் அன்றாட வாழ்விலும், செயலிலும், உளவியல் இருந்தாலும் கூட குறிப்பாக மக்களின் வாழ்வினைப் பிரதிபலிக்கும் கவிதையிலும், செய்யுளிலும் உளவியல் ஆக்கம் பெற்றுள்ளது. இலக்கியங்களில் மனிதர்களின் மெய்ப்பாடு உளவியல் உணர்வோடு மேலோங்கியுள்ளது. அக உணர்ச்சிகளின் உண்மையான வெளிப்பாடே மெய்ப்பாடாக அமைகின்றது. மெய் என்பது உடல். மெய்யின்கண் தோன்றும் உணர்வு மெய்ப்பாடு. மனிதன் தனது அக உணர்வை புறத்தே காட்டுவதற்காகத் தோற்றம் பெற்றவையே மெய்ப்பாடு ஆகும். இவ்வுணர்ச்சியானது எதையும் ஆராய்ந்து அறிந்தப் பிறகு வெளிப்படாமல் தாமாகவே தலைப்பட்டு வரும். இதனைத் தொல்காப்பியர், **உய்த்துணர்வு இன்றித் தலைவரும் பொருளான் / மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடகும் (தொல். பொரு. செய்யுளியல், நூ. 196)** என்னும் நூற்பா வழி எடுத்துரைக்கிறார். உலகையும் மனிதனையும் இணைப்பது அவனுயுடைய ஐம்புலன்களே ஆகும். ஏனைய உயர்களிடத்தும் அவை அமைந்திருப்பினும் மனிதனிடமே இவை விளக்கமுற்றிருக்கின்றன. புறப்பொருள் பிரதிபலிப்பே எண்ணமாகும். எண்ணத்திற்கேற்ப உணர்வுகள் தோன்றும், உணர்வுக்கேற்ப மெய்ப்பாடுகள் தோன்றும் என்பதை தொல்காப்பியர்,

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப (தொல். பொரு. செய்யுளியல், நூ. 3)**

என மெய்ப்பாட்டினை எட்டுவகையாகக் குறிக்கின்றார். இவை எட்டும் முதல்நிலை மெய்பாடுகளாய் அமைய இவற்றைச் சார்ந்து முப்பத்திரண்டு வகையான மெய்ப்பாடுகளும் தோன்றும் என்பதைத் தொல்காப்பியர் தனது மெய்ப்பாட்டியலில் எடுத்தியம்புகிறார்.

**பிற இலக்கண நூல்களில் மெய்ப்பாடு குறித்த பதிவுகள்**

மெய்ப்பாடானது கண்டது போலத் தோன்றும் கருத்து. இது நாட்டியத்திலும், காப்பியத்திலும், செய்கை திறத்திலும், சொல் திறத்திலும் தூண்டப்பட்ட வாசனைத் திண்மையால் தம்மை போல வந்து ஆனந்தமாய் நிற்பதாகும். இத்தகு மெய்ப்பாடு குறித்த பிற பதிவுகள் இலக்கண நூல்களிலும் காணப்படுகின்றன.

**Volume 3, Issue 2, November 2023** **E-ISSN – 2583-715X**

**தொன்னூல் விளக்கம்**

அகத்தில் தோன்றும் சுவையின் காரணமாக மெய்யின் புறத்தே அமைவது மெய்ப்பாடு என்று தொன்னூல் விளக்குகிறது. இதனை,

**சுவையணி என்ப கடுஞ்சினம் காமம்**
**வியப்பு அவலம் இழிவு நகை என**
**எண் மெய்ப்பாட்டின் இவையெனக் கூறி**
**உள்மெய்ப்பாட்டை உணர்த்தித் தோற்றலே (தொன்னூல் விளக்கம், நூ. 354)**

என்னும் நூற்பாவின் வழி அறியலாம்.

**இலக்கண விளக்கம்**

வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கமும் தொல்காப்பியத்தை அடியொற்றியே மெய்ப்பாடுகளுக்கு இலக்கணம் வகுக்கிறது என்பதை,

**உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருளின்**
**மெய்ப்பட் முடிப்பது மெய்ப்பாடு அதுதான்**
**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகைஎன்று**
**அப்பால் எட்டாம் அவ்வகை எட்டும்**
**என்று கூறுப இயல்புணர்ந் தோரே (இலக். விள. பொருள். அகத்திணையியல், நூ. 578)**

இந்நூற்பாவின் வழி உள்ளத்துணர்ச்சியை உற்றவர் அறிவிக்காமல் உடம்பின்கண் நிகழும் வேறுபாட்டால் அறிவிக்கும் கருவியே மெய்ப்பாடாகும். செய்யுளின் மெய்ப்பாட்டு உறுப்பாவது சொற்களைக் கொண்டு பொருளைக் கண்முன் நிறுத்துவதாகும்.

**மாறனலங்காரம்**

தொல்காப்பியத்தை ஒற்றியே மாறனலங்காரமும் மெய்ப்பாட்டியல் எட்டென கூறுகிறது. இதனை,

**பொறியுணர் பொடுமொரு பொருளிணையெதிர்ந்த**
**நெறியுடை மனத்துணிகழ்தரும் பான்மை**
**அயலவருப் புறத்தாய்ப் பொருளொட்டி**
**இயல்வது சுவையென் றியம்பினர் புலவர் (மாறன. பொருளணியலுரை, நூ. 197)**

என்னும் நூற்பாவினால் அறியலாம்.

**நகை**

நகை என்பது முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியைக் குறிக்கும். இந்த மகிழ்ச்சி என்னும் மெய்ப்பாடானது எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்ற நான்கின் வழியாகத் தோன்றும். இதனை,

**எள்ளல் இளமை பேதைமை மடனென்று**

Volume 3, Issue 2, November 2023 E-ISSN – 2583-715X

**உள்ளப் பட்ட நகைநான் கென்க (தொல். பொரு. மெய்ப்பாட்டியல், நூ. 4)**

எனத் தொல்காப்பியர் தனது நூற்பாவில் சுட்டியுள்ளார். எள்ளல் என்பது கேலிப் பேச்சாகும். தலைவன் தலைவி மீது காதல் கொண்டு அவளைப் பார்ப்பதற்காக வருகிறான். இவன் செய்யும் செயலானது கள்வர் தாம் குறித்துப் பொருளைப் பார்க்காமல் பார்த்துக் கொள்வதைப் போல் தலைவியைப் பார்ப்பதாக உள்ளது எனத் தோழி கூறி நகையாடுகிறாள். இவன் உன் தந்தையின் உள்ளம் குறைபடா வண்ணம் வேண்டிதான் குறித்த ஒன்றைக் கைப்பற்றாமல் போகாத குணம் உடையவனாக உள்ளான். அதனால் நீ அவனுக்கு அருள் செய்வதில் குறையில்லை. அவனின் குறைப்பற்றிக் கூறி இகழ்ந்து சிரித்தாலும் பலமுறையும் வருகிறான். இவனின் நாணமில்லாத இப்போக்கு உன்னை கைப்பற்றுவதற்காக பலரும் சிரித்து இகழும் படி மடல் ஏறுமாறு அமையும் அதனால் நீ விரைவில் அருள்வாயாக! எனத் தோழி குறைநயப்பித்துக் கூறினாள். இதனை,

**பல்லார் நக்கு எள்ளப்படு மடல்மா எறி**
**மல்லல் ஊர் ஆங்கண் படுமே நறுநுதல்**
**நல்காள் கண்மாறிவிடின் என் செல்வானாம்**
**எள்ளி நகினும் வருஉம் இடைஇடைக்**
**கள்வர்போல் நோக்கினும் நோக்கும் குறித்தது**
**கொள்ளாது போகாக் குணன் உடையன் எந்தை தன்**
**உள்ளம் குறைபடாவாறு (கலி. குறி., பா. 61. 22-28)**

என்னும் பாடலடிகள் விளங்குகின்றன.

**அழுகை**

அழுகை என்னும் மெய்ப்பாடானது கண்களில் இருந்து நீரைச் சிந்தும் ஓர் உணர்ச்சி வயப்பட்ட. மனநிலையாகும். இம்மெய்ப்பாடு இழிவு, இழவு, இசைவு, வறுமை என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும் என்பதை,

**இழிவே இழவே அசைவே வறுமையென**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே (தொல். பொரு. மெய்ப்பாட்டியல், நூ. 5)**

இந்நூற்பாவின் வழி அறியலாம். தலைவன் பரத்தையரை நாடிச் சென்ற பிறகு மீண்டும் தலைவி இருக்கும் இல்லத்திற்கே வருகிறான். இதனால் தலைவி தலைவன் மீது கோபம் கொண்டு நீ மீண்டும் பரத்தையர் இருக்கும் இடத்திற்கே செல் என்கிறாள். அதற்குத் தலைவன் தன்னுடைய இழிசெயலை எண்ணியழுது தலைவியின் அடிகளில் விழுந்து இறைஞ்சி எனக்கு அருள் செய்யவேண்டும் என வேண்டுகிறான். அப்போது தலைவி சிறிது மகிழ்ச்சியடைந்து அவனை மன்னித்து ஏற்றுக்கொள்கிறாள். இதனை,

***துனி சிறந்து இழிதரும் கண்ணிண் நீர் அறல் வார***
***இனிது அமர் காதலன் இறைஞ்சித் தன் அடி சேர்பு***

Volume 3, Issue 2, November 2023 E-ISSN – 2583-715X

**நனி விரைந்து அளித்தலின் நகுபவள் முகம் (கலி.மரு., பா. 71. 4-6)**

இப்பாடலடிகள் சுட்டுகின்றன. இது தன்னுடைய இழிசெயலினை நினைத்து தலைவனிடம் தோன்றிய அழுகையாகும். மலர்களில் தாதினைத் தேடியுண்ணும் வண்டு போல தலைவன் தலைவியின் நலம் கெடுதலைக் காணாது அவளின் அழகினை மட்டும் உண்ணுகிறான். இவன் சுயநலத்தை உடையவன், நாணுடையவன் அல்லன் என,

**நலனுடையார் மொழிக்கண் தாவார் தாம் தம்நலம்**
**தாது தேர் பறவையின் அருந்திறல் கெடுக்குங்கால்**
**ஏதிலார் கூறுவ தெவனோ (கலி.பாலை., பா. 22. 6-8)**

என தோழி கூறுவதின் வாயிலாக தலைவனின் இழிநிலை தெரிகின்றது. சங்க காலத்தில் பரத்தமை ஒழுக்கம் அங்கீகரிக்கப்பட்டதான இருந்ததால் ஊடல் கொண்ட மகளிர் ஊடல் தனிவதும் இயல்பே என்று கருத இடமுண்டு. சங்க காலத்தில் பரத்தமை ஒழுக்கம் அங்கீகரிக்கப்பட்டதாக இருந்ததால் ஊடல் கொண்ட மகளிர் ஊடல் தணிவதும் இயல்பே என்று கருத இடமுண்டு. சங்க காலத்தில் பொருளாதார மிகுதி பரத்தமை ஒழுக்கத்தின் ஒரு அங்கம் என்றால் அது மிகையாகாது இதற்கு சான்றாதாரமாகும். (ஜெ.வனிதா, பக். 556)

**இளிவரல்**

இளிவரல் என்பது பிறலால் இகழப்படுவதாகும். மானம் குன்ற வரும் தாழ்வு. நாணத்தக்க செய்கையால் இச்சுவைப் பிறக்கும்.இந்த மெய்ப்பாட்டை,

**மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே (தொல். பொரு. மெய்ப்பாட்டியல், நூ. 6)**

என்னும் நூற்பாவின் வழி இதில் மூப்பு என்பது முதுமைக் காரணமாகத் தோன்றும் தளர்ச்சி. பிணி என்பது நோய். வருத்தம் என்பது பயன் இல்லாத வீண்முயஞ்சி. மென்மை என்பது எளிமை, இயலாமை, ஆற்றலும் பொருளும் இன்றி எளியவராகும் நிலைமை என்பது தெரிகின்றது.

தலைவியைக் கூடிய தலைவன் பிரிந்து சென்றான். அவன் மீண்டும் வந்து கூடும் காலம் இரவோ, பகலோ என. அறியாது தலைவி வருந்துகிறாள். பகற்கொழுது வரட்டும் எனக் கூறுகிறாள். இதன் மூலம் தலைவன் அடுத்தப் பொழுதிலாவது வரமாட்டான என ஏங்கும் தவிப்புத் தெரிகிறது. இதனை,

**புல்லிய கேளிர் புணரும் பொழுதுணரேன்**
**எல்லி ஆக எல்லை என்று ஆங்கே பகல் முனிவேன்**
**எல்லிய காலை இரா முனிவேன் யான் உற்ற**
**அல்லல் களைவா ரிலேன் (கலி. நெய்., பா. 144. 51-54)**

என தலைவி தமது கூற்றின் வாயிலாக கடலே நான் எய்திய வருத்தத்தைப் போக்க யாரும் இல்லை என பிரிவிற்கு காரணமாக கடலை நோக்கிப் புலம்புகிறாள். இக்கூற்றில் தலைவன்

**Volume 3, Issue 2, November 2023** **E-ISSN – 2583-715X**

மீது கொண்ட அன்பின் காரணமாக தலைவி அடையும் வருத்தமான மனநிலையானது இப்பாடல் வெளிக்காட்டுகின்றது.

மருட்கையானது வியப்புச் சுவையாகும். எப்பொழுதும் நடக்காத நிகழாத இயற்கைக்குப் புறம்பான நிகழ்ச்சிகள் நிகழும் பொது இச்சுவைப் பிறக்கிறது.

**புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**

**மதிமை சாலா மருட்கை நான்கே (தொல். பொரு. மெய்ப்பாட்டியல், நூ. 7)**

என்னும் நூற்பாவின் வழி புதுமை என்பது தோன்றாத பொருள் தோன்றும் போது கண்டு வியத்தில், அளவில் பெரியது கண்டு வியப்பது பெருமை, சிறிய பொருளைக் கண்டு வியப்பது சிறுமை, ஆக்கம் என்பது செயற்கையாகத் தோன்றும் பொருள் கண்டு வியப்பதாகும்.

பொருள் தேடிச் செல்லும் தலைவன் அப்பொருளைக் கொண்டு சிற்றின்பம் நுகர்வானில்லை. இல்லறம் காத்தலும், சுற்றம் ஓம்பலும், பசித்தோரை துய்க்கச் செய்தலுமே அவன் கடமையாகும். அதனால் தான் 'வினையே ஆடவர்க்கு உயிரே' எனக் கூறுகின்றனர். 'இல்லென் றிரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு' எனக் கருதுபவனின் புகழ் ஞாயிறுபோல் உயர்ந்து பெ.ருமையுடன் விளங்கும் என்பதை, **பகலின் விளங்கு நின் செம்மல் (கலி.பாலை., பா. 19.11)** என்னும் அடியானது தலைவனின் பெருமையை உணர்த்துகிறது.

**அச்சம்**

மனித இனத்தில் அச்சம் என்பது அவரவர் மனத்துணிவிற்கு ஏற்ப இருப்பினும் பொதுவாகவே அனைவரிடத்திலும் இவ்வுணர்ச்சியானது அமைந்திருக்கிறது.

**அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்**

**பிணங்கல் சாலா அச்சம் நான்கே (தொல். பொரு. மெய்ப்பாட்டியல், நூ. 8)**

எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். அணங்கு என்பது பேய், பிசாசு போன்றவற்றைக் கண்டு அஞ்சுவதாகும். விலங்கெனப்படுவது யானை, வேங்கை, பாம்பு போன்ற கொடிய விலங்குகளைக் கண்டு நடுங்குவதாகும். கள்வர் என்பவர் பல உயர்களைக் கொல்லும் கொடுந்தொழில் புரிபவர். இறை எனப்படுவது தந்தை, ஆசிரியர், அரசன், வழிபடு, தெய்வம் போன்றவர் மீதுள்ள அச்ச உணர்வாகும்.

**பூங்கரை நிலத் தழீஇத் தளர் பொல்கிப்**

**பாங்கருங் கானத் தொளித்தேன் (கலி. முல்., பா. 115, 14-15)**

இப்பாடலில் தலைவன் கொடுத்த பூவினைத் தலைவி தலையில் சூட்டினாள் வீட்டில் செவிலித்தாய் முன்பு அப்பூவானது கீழே விழுந்தது. இதனால் களவொழுக்கம் செவிலித்தாய்க்கு தெரிந்துவிட்டது எனத் தலைவி தோழியிடம் கூறுகிறாள். அந்நிலையில் தலைவி தாழை உடுத்திய நீல ஆடையை கையாலே சிறிது பிடித்துக் கொண்டு அச்சத்தால் மெல்ல மெல்ல நடந்து அருகில் உள்ள கானகத்தில் ஒழிந்து கொண்டாள் என்று கூறுவதின் மூலம் தலைவி தாயின் மீது கொண்டுள்ள அச்சமானது வெளிப்படுகின்றது. **தலைவி களவு**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 3, Issue 2, November 2023 E-ISSN – 2583-715X

**வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் பல தலைவனுக்கு ஏற்படும் இடர்பாடுகள் தாய், செவிலி ஆகியோர் கட்டுபாடுகள் போன்றவைகளை நினைத்து தலைவி வருந்துகிறாள். (பெ.கனகசுந்திரி, பக் 416)** சங்க இலக்கியங்களில் தலைவி எனும் கட்டுரையில் அமைந்த செய்தி இங்கு ஒப்பிடப்படுகிறது.

**பெருமிதம்**

பெருமிதம் என்பது ஆற்றல், வீரம் முதலியவற்றால் ஏற்படும் மகிழ்வான உணர்வாகும். இதனைத் தொல்காப்பியர்,

**கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே (தொல். பொரு. மெய்ப்பாட்டியல், நூ. 9)**

என்ற நூற்பாவின் வழி பெருமிதம் குறித்துக் கூறியுள்ளார். இதில் கல்வி என்பது அறிவின் திறன். தறுகண் என்பது அஞ்சத்தக்கன கண்டு அஞ்சாமையாகிய வீரம், புகழ்மை என்பது பழியோடு செய்யாத புகழ்ச்சித் திறம். கொடை என்பது தன்னிடம் உள்ளதை பிறர்க்கு அளித்தல். இந்நான்கும் ஒருவரிடத்தில் இருக்கும் போது பெருமிதம் என்னும் மெய்ப்பாடானது இயல்பாகத் தோன்றும்.

**வல்லார்முன் சொல்வல்லேன் என்னைப் பிறர்முன்னர்க்**
**கல்லாமை காட்டியவள் வாழி (கலிநெய்., பா. 141. 19-20)**

என்னும் பாடலில் 'குற்றமுடைய சொற்களை சொல்லாத வல்லார் முன்பு வல்லானாகிய. என்னை' எனக் கூறுவதில் தலைவனின் கல்வி குறித்தப் பெருமிதம் தெரிகின்றது.

**அடல் மாமேல் ஆற்றுவேன் என்னை மடல் மாமேல்**
**மன்றம் படர் வித்தவள் (கலி. நெய்., பா. 141. 9-10)**

போரிலே வெற்றியளிக்கும் குதிரையின் மேலேறி வருகின்ற என்னை, பனை மடலால் ஆன குதிரைமேல் ஏறிவரச் செய்தவள் எனத் தலைவன் கூறுவதின் மூலம் தறுகண்மை தெரிகின்றது.

**வெகுளி**

வெகுளி என்பது சினம் இது வெறுப்பின் காரணமாக எழுவது ஆகும். அதன் இயல்பினை தொல்காப்பியர்

**உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன**
**வெறுப்பின் வந்த வெகுளி நான்கே (தொல். பொரு. மெய்ப்பாட்டியல், நூ. 9)**

என்னும் நூற்பாவில் கூறியுள்ளார். இதில் உறுப்பறை என்பது உறுப்பைக் குறைத்தல், குடிகோள் என்பது பிறருடைய. குடிப்பிறப்பின் உயர்வுக்கும், அவருடைய சுற்றத்தார்க்கும் கேடு விழைதல், அலை என்பது கோல் கொண்டு அடித்து வருத்துதல், கொலை என்பது பிறருடைய அறிவு, புகழ் ஆகியவற்றை அழித்துப் பேசுதலாகும்.

**அலவுற்றுக் குடி கூவ ஆறு இன்றிப் பொருள் வெஃகி**
**கொலை அஞ்சா வினைவாரல் கோல் கோடியவன் நிழல் (கலி. பாலை, பா. 10. 5-6)**

Volume 3, Issue 2, November 2023 E-ISSN – 2583-715X

என்னும் பாடலடியில் குடிமக்கள் துன்பத்தால் வருந்தும்படி கொலைத் தொழிலுக்கு அஞ்சாத அமைச்சரால் நெறியன்றி பொருளை வாங்கிக் கொண்டு செங்கோல் வளைய ஆட்சி செய்யும் மன்னன் எனக் கூறுவதில் கொலை செய்ய முடியலக் கூடிய அளவிலான சீற்றம் தோன்றும் மெய்ப்பாடு அமைந்துள்ளது.

**உவகை**

மனம் மகழ்வுற்ற நிலையில் தோன்றும் உணர்வே உவகையாகும். இதன் இயல்பினை,

**செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென**

**அல்லல் நீத்த உவகை நான்கே (தொல். பொரு. மெய்ப்பாட்டியல், நூ. 11)**

என்ற நூற்பா உணர்த்துகிறது. இவற்றுள் செல்வம் என்பது செல்வ நுகர்ச்சியும், புலன் என்பது புலமையால் ஏற்படும் அறிவு முதிர்ச்சி, புணர்வு என்பது காமப்புணர்வு, விளையாட்டு என்பது அனைவரும் ஒன்றிணைந்து விளையாடுவதாகும்.

**புல்லினத்து ஆயர் மகளிரோடு எல்லாம்**

**ஒருங்கு விளையாட (கலி. முல்., பா. 111.5-6)**

என்னும் அடியில் பாங்கர்க் கொடி, முல்லைக் கொடி போன்றவை பரவியுள்ள தோட்டத்தில் ஆடு மேய்க்கும் மகளிர், பசு மேய்க்கும் மகளிர், எருமை இன ஆயர்மகளிர் என அனைவரும் ஒன்று கூடி விளையாடினோம் என்பதில் விளையாடல் குறித்த மெய்ப்பாடு அமைந்துள்ளது. இதன் மூலம் அனைத்து மகளிரும் உயர்வு, தாழ்வு இன்றி விளையாடி மகிழ்கின்ற உவகையின் உளவியலும் வெளிப்படுகின்றது. தன் துணையுடன் ஆடிப்பாடி விளையாட ஆறு, குளம் போன்ற இடங்களுக்கு சென்ற மகிழ்ச்சியின் உள்ளுணர்வினை அறியலாம்.

**முடிவுரை**

சங்ககாலப் புலவர்கள் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு பல்வேறு வகையான உத்திகளைக் கையாண்டுள்ளனர். இவை பாடலுக்கு கருத்தினை சேர்ப்பதோடு, அழகினையும் சேர்க்கிறது. அக வாழ்வின் இயல்பினை வெளிப்படையாகக் கூறாமல் உள்ளுறைகளை பயன்படுத்திக் கூறிய புலவர்களின் படைப்பாக்கத் திறனைக் கலித்தொகையின் வாயிலாக அறியமுடிகிறது. மெய்யின் வழி தோன்றக் கூடிய உணர்வுகளை கலித்தொகைப் பாடல்களில் புகுத்திக் கற்போர்க்கு நெகிழ்வூட்டும் வகையில் இலக்கண மெய்ப்பாடுகளுடன் கலித்தொகை பாடல்களை உளவியல் ரீதியாக ஒப்பிடப்பட்டு இவ்வாய்வானது அமைக்கப்பட்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்**

[1] இளம்பூரணார். *தொல்காப்பியம் பொருளாதிகாரம்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை - 600108.

Volume 3, Issue 2, November 2023 E-ISSN – 2583-715X

[2] கு.வெ.பாலசுப்பிரமணியன். *கலித்தொகை மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-600098, முதற்பதிப்பு - 2004.

[3] திருக்குருகைப் பெருமாள் கவிராயர். *மாறனலங்காரம்.* செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை, இரண்டாம்பதிப்பு – 1929.

[4] வீரமாமுனிவர். *ஐந்திலக்கண தொன்னூல் விளக்கம்.* சூசையப்பர் அச்சுக்குடம், சென்னை, முதற்பதிப்பு – 1891.

[5] வெள்ளைவாரணன் .க. *தொல்காப்பியச் சிந்தனைகள்.* இந்தியப் பண்பாட்டு ஆய்வு மையம், சென்னை, முதற்பதிப்பு – 2013.

[6] வைத்தியநாத தேசிகர். *இலக்கண விளக்கம்.* சரஸ்வதி மகால் நூல் நிலையம், தஞ்சை, முதற்பதிப்பு – 1974.

[7] திலகவதி, க. *சங்ககால மகளிர் வாழ்வியல்.* இறையருள் பதிப்பகம், திருச்சி, முதற்பதிப்பு – 2004.

[8] பகவதி, கு. *திறனாய்வு அணுகுமுறைகள்.* உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு - 1989.

[9] பாலச்சந்திரன், சு. *இலக்கியத் திறனாய்வு.* நியூ செஞ்சுரி புக் ஹிவுஸ், சென்னை, முதற்பதிப்பு - 1976.

[10] வனிதா, ஜெ. "சங்க காலத்தில் மகளிர்." *செம்மொழித் தமிழ் சிறப்புதழ்,* நவம்பர் 2019, ISSN: 2321-0737.

[11] கனகசுந்திரி, பெ. "சங்க இலக்கியங்களில் தலைவி." *நவீனத் தமிழாய்வு ஆய்விதழ்,* அக்டோபர் 2021, ISSN: 2321 – 984X.

[12] மாணிக்கம், ஞ. *தொல்காப்பியம்.* உமா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2006.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.